වැවිලි සහ ප්‍රජා යටිතල පහසුකම් අමාත්‍යාංශය
பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு
Ministry of Plantation & Community Infrastructure

# 2024




# පොල් වගාකිරීමේ මණ්ඩලය
# தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை
# Coconut Cultivation Board

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report

1916

www.coconutsrilanka.lk

coconut App

## දැක්ම

ශ්‍රී ලංකාව ලෝකයේ වඩාත්ම කාර්යක්ෂම හා ඵලදායී පොල් නිෂ්පාදකයා කරවීම

## இலக்கு

இலங்கையினை உலகத்தில் மிகவும் வினைத்திறனான மற்றும் உற்பத்தி திறனான தென்னை உற்பத்தியாளராக்குதல

## Vision

To make Sri Lanka globally the most efficient & effective Coconut Producer

## මෙහෙවර

ශ්‍රී ලංකාවේ දේශීය පරිභෝජන ඉල්ලුම සහ අපනයන අවශ්‍යතාවය සපුරාලමින්, ස්වයංපෝෂිත තත්ත්වය ළඟාකර ගැනීම පිණිස ඵලදායී උපදේශන හා ව්‍යාප්ති සේවාවක් මගින් පොල් නිෂ්පාදනය ඉහළ නැංවීමත්, පොල් ඉඩම්වල ඵලදායීතාව ඉහළ නැංවීමත් තුළින් පොල් වගාකරුවාට ඉහළ ජීවන මට්ටමක් සාක්ෂාත් කරවීම අපගේ මෙහෙවරයි

## செயற்பணி

இலங்கையில் உள்நாட்டு நுகர்வுத் தேவை மற்றும் ஏற்றுமதித் தேவையினை பூர்த்தி செய்தல், சுயபோசணை நிலைமையினை நெருங்கும் பொருட்டு வினைத்திறனான மற்றும் உற்பத்தி திறனாக ஆலோசனையாளர் மற்றும் பரவலாக்கல் சேவையின் ஊடாக தென்னை உற்பத்தியினை உயர்த்துதலும், தென்னங் காணிகளில் உற்பத்தித் திறனினனை உயர்த்துவதன் ஊடாக தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களு க்கு உயர்ந்த வாழ்க்கை மட்டத்தினை வழங்குவதும் எங்களது செயற்பணியாகும்.

## Mission

To achieve a high living standard to the coconut producer through increasing the coconut production by means of an effective advisory & extension service and development assistant to increase the productivity of coconut land while meeting the domestic consumer demand and export requirement

# வருடாந்த அறிக்கை

# 2024

## குறிக்கோள்கள்

- பாரம்பரிய தென்னைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளிலிருந்து விலகி வடமாகாணத்தை மையமாகக் கொண்டு தென்னைப் பயிர்ச் செய்கையை விஸ்தரித்தல்.
- பாரம்பரிய விஸ்தரிப்புச் சேவைக்குப் பதிலாக தென்னைத் துறையுடன் தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைத்து பல அணுகல் விஸ்தரிப்பு முறையியல் மூலம் விஸ்தரிப்புச் சேவையை வலுப்படுத்துதல்.
- விஸ்தரிப்புச் சேவையை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ள விஸ்தரிப்புச் சேவையை வழங்குதல்.
- தென்னை நிலங்களுக்கு சேதன மற்றும் இரசாயன உரங்களை இடுவதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாடுகளை குறைத்து சிறந்த விளைச்சலைப் பெற தென்னை விவசாயிகளுக்கு வழிகாட்டுதல்.
- தென்னை நிலங்களில் மண் ஈரப்பதத்தை பாதுகாக்கும் முறைகள் மற்றும் நீர் வழங்கல் முறைமைகள் மூலம் தேங்காய் விளைச்சலை மேம்படுத்துதல்.
- தென்னைப் பயிர்ச் செய்கை மற்றும் விளைச்சலை சேதப்படுத்தும் நோய்கள் மற்றும் பூச்சிகளின் தாக்கங்களைக் குறைத்து அதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கச் செய்தல்.
- தென்னை நிலங்களுக்கு ஏற்ற ஊடுபயிர் மற்றும் கால்நடை வளர்ப்பை அறிமுகப்படுத்தி தென்னை நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
- தென்னைப் பயிர்ச் செய்கையின் உற்பத்தித்திறனை திறம்பட அதிகரிக்க விவசாயிகளுக்கு பயிராக்கவியல் நடைமுறைகள் பற்றிய அறிவை வழங்குதல்.
- கப்ருக்க நகர உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் வணிக வாய்ப்புகளை உருவாக்கவும் உதவும் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துதல்.
- இயந்திரமயமாக்கல் மூலம் தென்னை நில உற்பத்தியை அதிகப்படுத்துதல்.

## இலக்குகள்

- ஒவ்வொரு தென்னை விவசாயிக்கும் தென்னைப் பயிர்ச் செய்கைக்கான தொழில்நுட்ப அறிவினை வழங்கி திறன்களை வளர்த்தல்.
- கேள்வியை (தேவையை) அடிப்படையாகக் கொண்ட விஸ்தரிப்பு சேவைகளைப் பேணிச் செல்லல் மற்றும் உயர்தர உள்ளீடுகளை வழங்குதல்.
- இலங்கையில் நிலைபேறான தென்னை பயிர்ச் செய்கையைத் தாபித்தல்.
- தென்னை நிலத்திற்கு ஏற்ற ஊடு பயிர்களை பயிரிடுவதன் மூலம் தென்னை நிலத்தின் பயன்பாட்டை அதிகப்படுத்துதல்.
  உள்நாட்டு நுகர்வு, தென்னைசார் உற்பத்திகள் மற்றும் வெளிநாட்டு சந்தைக்குத் தேவையான தேங்காயை நாட்டில் உற்பத்தி செய்தல்.

# அறிமுகம்

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் இலக்கம் 02 வது பிரிவின் கீழ் தீவில் தென்னைப் பயிர்ச்செய்கையின் அபிவிருத்தியினை நோக்காக் கொண்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் நிறுவப்பட்டது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ந் திகதி தொடக்கம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ந் திகதி வரையான காலத்தினுள் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் நடவடிக்கைகள் இந்த அறிக்கையினுள் உட்புகுத்தப்பட்டுள்ளது.

அதன் சட்டத்தின் பிரகாரம் சபையின் கடமைப் பொறுப்புக்கள் கீழ் குறிப்பிடப்பட்ட விதம் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

• தென்னைப் பயிரிடப்பட்டுள்ள காணிகளில் உற்பத்தித் திறனினை வளர்த்தல் மற்றும் அவ்வாறு வளர்த்தலுக்கு உதவியளித்தல்.

• காணிகளில் தென்னையினைப் பயிர்ச்செய்தல், அவற்றினை பயிரிடுவதனை முன்னேற்றல் மற்றும் முறைமைப்படுத்துவதற்கு உதவியளித்தல்(புற்கள் உள்ளடங்கலாக), வேறு பயிர்க-ளில் ஊடுப்பயிர்களுக்காக பொருத்தமான தென்னைப் பயிரிடப்பட்டுள்ள இடங்களினை தெரிவு செய்தல் மற்றும் அதன் காணிகளில் ஊடுப் பயிர்ச்செய்கையினை முன்னேற்றுதல், செயற்படுத்தல், பேணுதல் மற்றும் பேணுவதற்கு உதவி செய்தல்.

• தென்னை பயிரிடப்பட்டுள்ள காணிகளில் கால்நடை வேளாண்மையினை முன்னேற்றுதல் மற்றும் முறைமைப்படுத்தல், அதற்கு உதவியளித்தல் மற்றும் அதில் ஈடுபடல்.

• தென்னைப் பயிரிடப்பட்டுள்ள காணிகளில் தென்னை மற்றும் வேறு பயிர்களினை வளர்த்தல் சம்பந்தமாக உரிய பயிர்ச்செய்கை முறைமையினை விபரித்தல், பிரபலப்படுத்தல், முன்னேற்றுதல் மற்றும் செயற்படுத்தல்.

• தெங்கு கைத்தொழிலுக்கு உதவியளித்தல், ஆலோசனை மற்றும் பரவலாக்கல் ஊழியர்களுக்கு பயிற்றுவித்தல்.



# Board of Directors - 2024

| | | |
|---|---|---|
| 01. திருமதி ஏ.வி.கே. மாதவி ஹேரத் | 2021.07.06<br>-2024.07.06 | தலைவர் |
| 02. திரு.பண்டுக வீரசிங்க | 2024.07.11<br>-2024.09.26 | தலைவர் |
| 03. திரு. ஏ.டி. சமன் குமார | 2024.10.09<br>-2024.12.15 | தலைவர் |
| 04. வைத்தியர். திரு. ஜே.ஏ.டி.ஜே.எஸ்.கே. ஜயகொடி | 2024.12.16 | தலைவர் |
| 05. திரு.கே.எஸ்.விஜயகீர்த்தி | - | மேலதிக செயலாளர் – பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு |
| 06. திரு.ரீ.எம்.ஜே.பண்டார | - | மேலதிக பணிப்பாளர் நாயகம் – (ப.க.) நிதி அமைச்சு |
| 07. கலாநிதி நயனி எஸ்.ஆரச்சி | - | பணிப்பாளர் - தென்னை ஆராய்ச்சி நிறுவனம் |
| 08. வைத்தியர். திருமதி. நுயனி எஸ். ஆரச்சி | - | பணிப்பாளர் - தென்னை ஆராய்ச்சி நிறுவனம் |
| 09. திரு.சுரே' சில்வா | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 10. திரு.ஏ.ஈ.பிரணாந்துபுள்ளே | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 11. திரு.எஸ்.கே.மலவிஆரச்சி | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 12. திரு.எம்.கே.ரங்கன சுஜீவ | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 13. திரு.துலான் ஹெட்டிஆரச்சி | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 14. திரு.காவிந்த துல்லாவ | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 15. கலாநிதி ரொ'ான் பெரேரா | - | கண்காணிப்பு உறுப்பினர் - தென்னை அபிவிருத்தி |
| 16. திரு.அரோ' ரொட்ரிகோ | - | கண்காணிப்பு உறுப்பினர் - தலைவர் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் |



# தலைவரின் செய்தி

அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக, உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பெருந்தோட்டப் பயிர் வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஒரு பிரதான பயிராக தென்னைப் பயிர்ச் செய்கையைக் கருதலாம். இத்தகையதொரு பின்னணியில், தென்னைத் துறையின் முன்னேற்றத்திற்காக ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக மிகப் பெரிய பணிப்பொறுப்பை ஈடேற்றிய ஒரு அரச நிறுவனமாக தென்னைப் பயிர்ச் செய்கை சபையை அறிமுகப்படுத்தலாம்.

அதற்கமைய, 2024 ஆம் ஆண்டிலும் அரச நிறுவனம் என்ற வகையில் தென்னைத் துறையின் மேம்பாட்டிற்காக, 2,754 மில்லியன் தேங்காய்களின் வருடாந்த தென்னை விளைச்சலைப் பெற்று, தென்னைசார் உற்பத்திகளின் ஏற்றுமதி மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு 854.93 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானத்தை ஈட்டி, தென்னைத் துறையின் முன்னேற்றத்திற்காக உச்சபட்ச பங்களிப்பை வழங்குவதற்கு எமது நிறுவனத்தினால் முடிந்தது. 2024 ஆம் ஆண்டில் தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்கு தேசிய வரவு செலவுத் திட்டத்தின் மூலதன செலவினத் தலைப்பின் கீழ் திறைசேரியினால் 550 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தரமான உயர்ந்த தென்னங் கன்றுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு 1.639 மில்லியன் தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன. அவற்றில் 1.163 மில்லியன் தென்னங் கன்றுகளை பல்வேறு மானிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வழங்கவும், 0.476 மில்லியனை பயிர்ச் செய்கையாளர்களுக்கு பணத்திற்கு வழங்கவும் முடிந்தது. தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்குச் சொந்தமான 03 தென்னை அபிவிருத்திப் பயிற்சி நிலையங்கள் மூலம் 2024 ஆம் ஆண்டில் 5,485 பயனாளிகளுக்கு தென்னைச் செய்கை தொடர்பான அறிவைப் புகட்டுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மேலும், தென்னைத் துறையின் விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திச் சேவையின் கீழ் தென்னைச் செய்கையாளர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் மானியங்களுக்கும் 476.446 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் பரவிவரும் வெலிகம இலை வாடல் மற்றும் அழுகல் நோய் காணப்படும் பிரதேசங்களில், நோயுற்ற மரங்கள் அகற்றப்பட்ட காணிகளில், நோய் தாக்காத பலன் தரும் மரங்களின் வீரியத்தை அதிகரிப்பதன் மூலம் நோய்த்தாக்கத்திற்கு ஈடுகொடுக்கும் திறனை அதிகரிப்பதற்காகவும், இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதைப் பிரபலப்படுத்துவதன் மூலம் தென்னை மரங்களின் விளைச்சலை அதிகரிப்பதற்காகவும் 47,030 தென்னை மரங்களுக்கு இரசாயன உரமிடுவதற்காக 23.531 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டது. இந்த முழுமையான கருத்திட்டத்திற்காகவும் 2024 ஆம் ஆண்டில் நேர்வரிசை அமைச்சினால் 61.369 மில்லியன் ரூபா அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

சுய நிதியீட்டல் அலகாக, மாதிரித் தென்னந்தோட்டங்கள் மற்றும் நாற்று மேடை அபிவிருத்திப் பிரிவின் கீழ் 11 மாதிரித் தென்னந்தோட்டங்களும், 36 நாற்று மேடைகளும், ஒரு விதை உற்பத்தி அலகும் மற்றும் 12 மைட்டா ஆய்வுகூடங்களும் இயங்கி வருகின்றன. மாதிரித் தென்னந்தோட்டங்கள் மற்றும் நாற்று மேடை அபிவிருத்திப் பிரிவில் 746 ஊழியர்களுக்குச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்கி, அந்த நிறுவனங்களைப் பராமரித்து, சபைக்குத் தேவையான ஏனைய மீண்டெழும் செலவுகளையும் வழங்கி, பல்வேறு வருமானம் ஈட்டும் கருத்திட்டங்களை உருவாக்குவதன் மூலமாக, ஒட்டுமொத்தமாக மாதிரித் தென்னந்தோட்டங்கள் மற்றும் நாற்று மேடை அபிவிருத்திப் பிரிவு 83.24 மில்லியன் ரூபா மேலதிகத்தை ஈட்டித் தந்து, தேசிய பொருளாதாரத்திற்கு வலிமையை வழங்கியுள்ளது. தென்னைப் பயிர்ச் செய்கைத் துறையின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு, நேர்வரிசை அமைச்சின் கௌரவ அமைச்சர், அமைச்சின் செயலாளர் உட்பட அமைச்சு ஊழியர்கள் வழங்கிய சரியான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளுக்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், இந்த ஆண்டில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு பதவியணியை வழிநடத்திய பொது முகாமையாளரை உள்ளிட்ட எமது ஒட்டுமொத்த பணியாளர்களுக்கும் எனது மரியாதைக்குரிய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வைத்தியர் ஜே.ஏ.டி.ஜே.எஸ்.கே. ஜயக்கொடி

தலைவர்

தென்னைப் பயிர்ச் செய்கை சபை



# பொது முகாமையாளரின் செய்தி

பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் இலங்கையர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பயிர்த்தொகுதியின் கீழ் வகைபடுத்தப்பட்டுள்ளஒரு பிரதான பயிராக தென்னை காணப்படுகின்றது. ஆகவே, தென்னைப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள மூன்று அரச நிறுவனங்களில் தென்னைப் பயிர்ச் செய்கை சபை பொதுமக்களுக்கு மிக முக்கியமானதும் நெருக்கமானதுமான ஒரு நிறுவனமாகும்.உள்நாட்டுப் பயன்பாடு மற்றும் ஏற்றுமதித் தேவையை நிறைவு செய்யும் வகையில் வருடாந்த தேங்காய் உற்பத்தி அளவை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு, பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற நிலங்களில் தென்னைப் பயிர்ச் செய்கையை பிரபலப்படுத்தவும், தற்போதுள்ள தென்னைப் பயிர்ச் செய்கையின் விளைச்சலை அதிகரிக்கவும் முன்னுரிமை அளித்து, 2024 ஆம் ஆண்டில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

2024 ஆம் ஆண்டில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால், வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை, முறையான தென்னைப் பயிர்ச் செய்கை மற்றும் தற்போதுள்ள பயிர்ச் செய்கைகளில் இடைவெளி நிரப்புதல் ஆகிய மூன்று மானியத் திட்டங்களின் கீழ் 1.163 மில்லியன் தென்னங்கன்றுகள் நடப்பட்டன. மேலும் 0.476 மில்லியன் தென்னங்கன்றுகள் விற்பனை செய்யப்பட்டன. இதன் மூலம் 2024 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் மொத்தம் 1.639 மில்லியன் தென்னங்கன்றுகள் பயன்படுத்தப்பட்டு, சுமார் 25,621 ஏக்கர் புதிய தென்னைப் பயிர்ச் செய்கை நிலம் நாட்டின் மொத்த தென்னைப் பயிர்ச் செய்கை பரப்புடன் இணைக்கப்பட்டது. வட மாகாணத்தில் தென்னைப் பயிர்ச் செய்கையை பிரபலப்படுத்தும் நோக்குடன், வட மாகாணத்தை மையமாகக் கொண்டு, மூன்று வருட காலப்பகுதியில் 50,000 ஏக்கர் தென்னங் காணிகளை அபிவிருத்தி செய்யும் இலக்குடன், வடக்கு தென்னை முக்கோணத்தை நிறுவும் கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் மட்டும் இந்த கருத்திட்டத்தின் கீழ் 154,433 தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

செவ்விளநீருக்கான தற்போதைய கேள்வி அதிகரித்துள்ளதால், செவ்விளநீர்ப் பயிர்ச் செய்கையை மேம்படுத்தும் நோக்குடன் 26,444 செவ்விளநீர்க் கன்றுகளை விவசாயிகளுக்கு விநியோகிக்கவும், 66 செவ்விளநீர்க் கிராமங்களை அமைக்கவும் இந்த ஆண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.நாளுக்கு நாள் அதிகரித்து வரும் எல்நினோ நிலைமைகளிலிருந்து தென்னைப் பயிர்ச் செய்கையைப் பாதுகாக்கும் நோக்குடன், தென்னை மரங்களுக்கு மூடாக்கு இடுவதற்கான மானிய நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடிந்தது. இதன் மூலம் நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு 367,529 தென்னை மரங்களுக்கு மூடாக்கு இடுவதற்கான மானியம் வழங்க முடிந்தது.அத்துடன், தற்போதுள்ள தென்னை நிலங்களில் முழுமையான பண்ணை அபிவிருத்தி மூலம் வணிக விவசாயத்தை தென்னை நிலங்களை அண்மித்து மேம்படுத்தும் நோக்குடன், கப்ருக முதலீட்டுக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில் 766 விவசாயிகளுக்கு 3,243 ஏக்கர் நிலத்தை மேம்படுத்துவதற்காக ரூ. 615.12 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தில் வெற்றிடமாக இருந்த பல பதவிகளுக்கான உத்தியோகத்தர் பதவி உயர்வுகள் மற்றும் புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் நடத்தப்படுதல், முழுப் பதவியணிக்குமான வெளி மற்றும் உள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அறிவு, மனப்பாங்கு, திறன்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதேபோல் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் சுயநிதிப் பிரிவு வெற்றிகரமாக செயற்பட்டு கணிசமான இலாபத்தினை ஈட்டி வருகின்றது. இலங்கையில் விவசாய ஆலோசனை சேவைகளை வழங்கும்நிறுவனங்களளுக்கு மத்தியில் காணப்படுகின்ற முக்கிய நிறுவனமான தென்னைப் பயிர்ச் செய்கை சபை, இலங்கையில் தென்னைப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சிக்காக தென்னை விவசாயிகளுக்கு பல்வேறு நடவடிக்கைகளைப் பின்பற்றி, தேசிய மட்டத்தில் விரிவாக்க சேவைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

2024 ஆம் ஆண்டில் தென்னைப் பயிர்ச் செய்கை சபை இத்தகைய பல தனித்துவமான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது, அந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எமது அனைத்து ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதோடு அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அவ்வாறு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எங்களை ஊக்குவித்து, சரியாக வழிநடத்தி, தேவையான பலத்தை வழங்கிய கௌரவ அமைச்சர், அமைச்சுச் செயலாளரை உள்ளிட்ட அமைச்சுப் பணியாளர்களுக்கும், தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரை உள்ளிட்டபணியாளர்களுக்கும், குறிப்பாக தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவியை உள்ளிட்ட பணிப்பாளர் சபைக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டப்ளியூ.எம்.ஏ.பீ. விஜேசிங்ஹ
பொது முகாமையாளர்
தென்னைப் பயிர்ச்செய்கை சபை

# தென்னைப் பயிர்ச்செய்கைச ் சபைபற்றி சுருக்கமாக

தீவில் தென்னைப் பயிர்ச்செய்கையினை அபிவிருத்தி செய்வதற்காக சபையின் இலக்கு மற்றும் நோக்க ம்மிகவும் ஒழுங்குமுறையாக மற்றும் உற்பத்தி திறனினை நிறைவேற்றிக் கொள்வதற்காகதலைமை அலுவலகம், பிரதேச ரீதியிலான அலுவலகங்கள் 20, தென்னை அபிவிருத்தி அலுவலர் அலுவலங்கள் 265,தென்னைஅபிவிருத்திபயிற்சிமத்தியநிலையங்கள் 03,நாற்றுமேடைகள் 36,மாதிரி தென்னந் தோட்டங்கள் 11 மற்றும் விதை உற்பத்தி அலகி-னால் தென்னைப் பயிர்ச்செய்கை சபைஉள்ளடக்கியுள்ளது.

## தலைமை அலுவலகம்

9/428,தென்னைப்பயிர்ச் செய்கைச்சபை,
கப்ருகபியச,
டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.
தொலைபேசி - 011-2861331, 011-5635623
தொலைநகல் - 011-5549507
மின்னஞ்சல் - ccb@sltnet.lk
வெப்தளம் - www.coconutsrilanka.lk

| | |
|---|---|
| பொது முகாமையாளர் | 01 |
| பிரதி பொது முகாமையாளர் | 04 |
| உதவி பொது முகாமையாளர் | 08 |
| பிரதேச முகாமையார் மற்றும் | |
| விடய பொறுப்பு முகாமையாளர் | 36 |
| உதவி முகாமையாளர்கள | 95 |
| மொழிப் பெயர்ப்பாளர்கள் | 02 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | |
| தொழிநுட்பம் | |
| - தென்னைஅபிவிருத்திஅலுவலர்கள் | 300 |
| - வதிவிட நாற்று மேடை பொறுப்பு அலுவலர்கள் | 40 |
| - தொழிநுட்ப உதவியாளர்கள் | 03 |
| - பயிற்சி அலுவலர்கள் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | |
| தொழிநுட்பம் அல்லா | |
| - தென்னை அபிவிருத்தி அலுவலர்கள் | 76 |
| - முகாமைத்துவ உதவியாளர்கள் | 200 |
| முதனிலை தரத்தின் ஊழியர்கள் | 152 |
| மொத்த அலுவலக ஆளனியிரின் வலு | 918 ஆகும் |

# தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் நிறுவன கட்டமைப்பு



# தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் பரவலக்கல் மற்றும் சேவை வலைப்பின்னல்



# தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் பரவலக்கல் மற்றும் சேவை வலைப்பின்னல்

| பிரதேச அலுவலகங்கள் 20 | | | |
|---|---|---|---|
| **தொடர்இல** | **பிரதேச அலுவலங்கள்** | **முகவர்** | **தொலைபேசி இலக்கம்** |
| **01** | **அநுராதபுரம்** பிரதேச அலுவலகம் | மூன்றாவது கட்டம், தஹயியாகம சந்தி, அநுராதபுரம். | 025-2222543 |
| **02** | **அம்பாறை** பிரதேச அலுவலகம் | தர்மபாலமாவத்தை, கச்சேரிக்குமுன்னால், அம்பாறை | 063-2222477 |
| **03** | **களுத்துறை** பிரதேச அலுவலகம் | நாகொட, களுத்துறை | 034-2222732 |
| **04** | **கேகாலை** பிரதேச அலுவலகம் | வரகாஉல்லவளவ்வ, கரடுபன,கண்டிவீதி, கேகாலை. | 035-2222120 |
| **05** | **குருநாகலை** பிரதேச அலுவலகம் | வெஹெர, குருநாகலை. | 037-2222534 |
| **06** | **குளியாப்பிட்டிய** பிரதேச அலுவலகம் | இல.20,பன்னலவீதி,குளியாப்பிட்டிய. | 037-2281169 |
| **07** | **கம்பஹா** பிரதேச அலுவலகம் | பென்டியமுல்ல,கம்பஹா. | 033-2222037 |
| **08** | **காலி** பிரதேச அலுவலகம் | லபுதுவ, அக்மீமன,காலி. | 091-2234501 |
| **09** | **திருகோணமலை** பிரதேச அலுவலகம் | கும்புறுப்பிட்டி,திருகோணமலை | 026-2054018 |
| **10** | **பொலந்நறுவை** பிரதேச அலுவலகம், | புதியநகரம்,பொலந்நறுவை. | 027-2222377 |
| **11** | **மட்டக்களப்பு** பிரதேச அலுவலகம் | மயிலாம்பாவெளி, தன்னாமுனை,மட்டக்களப்பு. | 065-2240103 |
| **12** | **மாத்தறை** பிரதேச அலுவலகம் | இல. 331/9,அநாகரிகதர்மபாலமாவத்தை, நூபே, மாத்தறை. | 041-2222060 |
| **13** | **மாத்தளை** பிரதேச அலுவலகம் | கண்டிவீதி, கோஹோம்பிலிவல,மாத்தளை | 066-2222047 |
| **14** | **மாரவில** பிரதேச அலுவலகம் | முதுகட்டுவ,மாரவில. | 032-2254237 |
| **15** | **மொணராகலை** பிரதேச அலுவலகம் | ஹுலங்தாவதெற்கு,மொணராகலை. | 055-2276058 |
| **16** | **யாழ்ப்பாணம்** பிரதேச அலுவலகம் | இல.595/10, நாவலர்வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம் | 021-2284501 |
| **17** | **இரத்தினபுரி** பிரதேச அலுவலகம் | புதியநகரம்,இரத்தினபுரி. | 045-2228561 |
| **18** | **ஹம்பாந்தோட்டை** பிரதேச அலுவலகம் | இல.27, தங்காலைவீதி,ஹம்பாந்தோட்டை | 047-2220144 |
| **19** | **வவுனியாவ** பிரதேச அலுவலகம் | இல.25, பத்தினியார், மயிலங்குளம், நாச்சிக்குளம், வவுனியா | 024-2050344 |
| **20** | **கண்டி பிராந்திய அலுவலகம்** | ලඟ බිරි/„ හටයවචිතය නයඑවතසව, හටයඑහ, විතඉ | 081-2222447 |

தென்னைப்பயிர்ச்செய்கைச்சபைக்குரியவிதைத்தேங்காய்க்கன்றுகள்நாற்றுமேடைகள் 39 ஆகும்.

| தொடர்இல | நாற்றுமேடை | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 1. **கலாவெவ** தென்னங் கன்று நாற்று மேடை, கலாவெவ, விஜித்தபுர. | 025-2264194 |
| 02 | அம்பாறை | 2. **உஹன** தென்னங் கன்று நாற்று மேடை, பாலம்கந்தவுர, உஹன. | 063-2250119 |
| 03 | களுத்துறை | 3. **கொரொஸ்துவ** தென்னங் கன்று நாற்று மேடை, கொரொஸ்துவ, வாத்துவ. | 038-2295126 |
| 04 | கேகாலை | 4. **மத்தமகொட** தென்னங் கன்று நாற்று மேடை, மத்தமகொட, கன்னன்தொட்ட. | 035-2289105 |
| | | 5. **எரமிணிகொல்ல** தென்னங் கன்று நாற்று மேடை, எரமிணிகொல்ல, ஹிரிவடுன்ன. | 035-2263006 |
| 05 | குருநாகலை | 6. **இப்பாகமுவ** தென்னங் கன்று நாற்று மேடை, இப்பாகமுவ. | 037-2235776 |
| | | 7. **வாரியபொல** தென்னங் கன்று நாற்று மேடை, வாரியபொல . | 037-2267691 |
| | | 8. **நிகவெரட்டிய** தென்னங் கன்று நாற்று மேடை, நிகவெரட்டிய. | 037-2260619 |
| | | 9. **பொல்கஹாவெல** தென்னங் கன்று நாற்று மேடை, செரபீஸ்வத்த, பனலிய, பொல்கஹாவெல | 037-2244367 |
| | | 10. **வென்னொருவ** தென்னங் கன்று நாற்று மேடை, முத்துகலவத்த, வென்னொருவ. | 037-2249836 |
| | | 11. **தொடங்கஸ்லந்த**தென்னங் கன்று நாற்று மேடை, பலவத்தலவத்த, தொடங்கஸ்லந்த. | 037-2252625 |
| 06 | குளியாப்பிட்டிய | 12. **பிங்கிரிய** தென்னங் கன்று நாற்று மேடை, ඉසන්ගම, பிங்கிரிய. | 032-2246425 |
| | | 13. **ஹெட்டிபொல** தென்னங் கன்று நாற்று மேடை, ஹெட்டிபொல. | 037-2291332 |
| | | 14. **தியதொர** தென்னங் கன்று நாற்று மேடை, பஹலதியதொர. | 037-2282537 |
| 07 | கம்பஹா | 15. **வல்பிட்ட** தென்னங் கன்று நாற்று மேடை, வல்பிட்ட. | 033-2272559 |
| | | 16. **கிரிந்திவெல** தென்னங் கன்று நாற்று மேடை, கிரிந்திவெல. | 033-2267704 |
| 08 | காலி | 17. **பத்தேகம** தென்னங் கன்று நாற்று மேடை, பெடஸ்ஸுவத்த, ஹல்பாத்தொட்ட, பத்தேகம, காலி. | 091-2292745 |
| | | 18. **லபுதுவ** தென்னங் கன்று நாற்று மேடை, லபுதுவ, அக்மீமன, காலி. | 091-2234501 |
| 09 | திருகோணமலை | 19. **கும்புறுப்பிட்டி** தென்னங் கன்று நாற்று மேடை, கும்புறுப்பிட்டி, திருகோணமலை. | 026-2054018 |
| 10 | பொலந்நறுவை | 20. **பராக்கிரம சமுத்திரம்** தென்னங் கன்று நாற்று மேடை, ரிச்சர்ட் அலுவிஹாரே பூங்கா, பராக்கிரம சமுத்திரம். | 027-2224304 |
| | | 21. **உல்ஹிட்டிய** தென்னங் கன்று நாற்று மேடை, உல்ஹிட்டிய வத்த, கிராந்துருகோட்டை. | 024-2222377 |
| 11 | மட்டக்களப்பு | 22. **மயிலாம்பாவெலி** தென்னங் கன்று நாற்று மேடை, மயிலாம்பாவெலி, தன்னாமுனை,மட்டக்களப்பு | 065-2240924 |
| 12 | மாத்தளை | 23. **பல்லேகெலே** தென்னங் கன்று நாற்று மேடை, பல்லேகெலே, பலகொல்ல, கெங்காலை. | 081-2063595 |

| | | | |
|---|---|---|---|
| 13 | மாரவில | **24. கிரிமெட்டியான** தென்னங் கன்று நாற்று மேடை, கிரிமெட்டியான, லுணுவில. | 032-2254237 |
| | | **25. வில்பொத்த** தென்னங் கன்று நாற்று மேடை, வில்பொத்த, பத்துலுஓய. | 032-2254237 |
| | | **26. அட்டவில்லுவ** தென்னங் கன்று நாற்று மேடை, அட்டவில்லுவ, குருநாகலை வீதி, புத்தளம். | 032-2254237 |
| 14 | மொணராகலை | **27. ஹந்தபானாகல** தென்னங் கன்று நாற்று மேடை, ஹந்தபானாகல, வேஹெரயாய. | 055-2274665 |
| | | **28. வெலிப்பிட்டிய** தென்னங் கன்று நாற்று மேடை, வெலிப்பிட்டிய வத்த, நன்புராவ, பிபில. | 055-2274665 |
| 15 | வவுனியா | **29. மடு** தென்னங் கன்று நாற்று மேடை. வவுனியா | 024-2050344 |
| 16 | யாழ்ப்பாணம் | **30. கிளிநொச்சி** தென்னங் கன்று நாற்று மேடை, D 3, பன்னன்கன்னி,கிளிநொச்சி. | 021-2284501 |
| | | **31. தேவிபுரம்** தென்னங் கன்று நாற்று மேடை, இல. 29/Aபகுதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. | 021-2284501 |
| | | **32. அச்சுவேலி** தென்னங் கன்று நாற்று மேடை, வசாவிலான், அச்சுவேலி, யாழ்ப்பாணம் | 021-2284501 |
| | | **33. அளம்பில்** தென்னங் கன்று நாற்று மேடை, அளம்பில், முல்லைத்தீவு. | 021-2284501 |
| 17 | இரத்தினபுரி | **34. எம்பிலிப்பிட்டிய** தென்னங் கன்று நாற்று மேடை, துங்கம, எம்பிலிப்பிட்டிய. | 047-2230569 |
| 18 | ஹம்பாந்தோட்டை | **35. மெதமுலன** தென்னங் கன்று நாற்று மேடை, மெதமுலன,வீரக்கெட்டிய. | 047-2246359 |
| | | **36. மயுரபுர** தென்னங் கன்று நாற்று மேடை, மயுரபுர, ஹம்பாந்தோட்டை | 047-2220144 |

**மாதிரி விதைத் தேங்காய்த் தோட்டம் 11**

| தொடர் இல | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 01 | **மஹாயாய** மாதிரி தென்னந் தோட்டம், மாகந்துர, கோனவில. | 031-2299781 |
| 02 | **லேனவ** மாதிரி தென்னந் தோட்டம், ஹிரியால, லேனவ. | 037-4944425 |
| 03 | **டேசிவெலி** மாதிரி தென்னந் தோட்டம், இலுக்வெல, வேஉட | 037-2299880 |
| 04 | **ரநதெனியா** மாதிரி தென்னந் தோட்டம், வாரியபொல. | 037-5555217 |
| 05 | **நாகன்சோலை** மாதிரி தென்னந் தோட்டம், வன்னி, ரஸ்நாயக்கபுர. | 037-4944464 |
| 06 | **போப்பிட்டிய** மாதிரி தென்னந் தோட்டம், போப்பிட்டிய.(வடமேல்) | 037-2288601 |
| 07 | **கர்ட்லன்ட்** மாதிரி தென்னந் தோட்டம், நாம்பிரித்தன்கடவர, வெலிபென்னகஹமுல. | 037-4930928 |
| 08 | **கோஹோம்பான** மாதிரி தென்னந் தோட்டம், கோஹோம்பான வத்த, கோனாகொல்ல. | 063-3632186 |
| 09 | **கொரை** மாதிரி தென்னந் தோட்டம், திருக்கோவில். | 067-3694530 |
| 10 | **பாசிக்குடா** மாதிரி தென்னந் தோட்டம், கற்குடா, பாசிக்குடா. | 065-2050224 |
| 11 | **பளை** மாதிரி தென்னந் தோட்டம், கண்டிவீதி, பளை. | 021-2050013 |

| தென்னைப் பயிர்ச்செய்கைக்கு உரிய பயிற்சி மத்திய நிலையங்கள் 03 | | | |
|---|---|---|---|
| தொடர்இல | பயிற்சி மத்திய நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
| 01 | **லுணுவில தென்னை அபிவிருத்தி பயிற்சிமத்திய நிலையம்** | உதவி பொது முகாமையாளர்(பயிற்சி), தென்னை அபிவிருத்தி பயிற்சி மத்திய நிலையம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, பண்டிருப்புவத்த, லுணுவில. | 031-2255048 |
| 02 | **மெதமுலன தக்ஷின லங்கா தென்னை அபிவிருத்தி பயிற்சிமத்திய நிலையம்** | களப் பொறுப்பு அலுவலர், தக்ஷின லங்காதென்னை அபிவிருத்தி பயிற்சி மத்திய நிலையம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, மெதமுலன, வீரக்கெட்டிய | 047-2257534 |
| 03 | **யாழ்ப்பாணம் தென்னை அபிவிருத்தி பயிற்சிமத்திய நிலையம்** | களப் பொறுப்பு அலுவலர், தென்னங் கன்று நாற்று மேடை, அரலிய வீதி, அச்சுவேலி, யாழ்ப்பாணம் | 021-3141245 |

| விதை உற்பத்தி அலகு | | | |
|---|---|---|---|
| 01 | **விதை உற்பத்தி அலகு** | இல.19, தம்மிட்ட வீதி, நீர்க்கொழும்பு | 031-2226119 |

## தென்னை தொழிநுட்ப பூங்கா

| | | | |
|---|---|---|---|
| **01** | தென்னை கலாச்சார பூங்கா | தென்னை தொழிநுட்ப பூங்கா பாசிக்குடா மாதிரி தென்னந் தோட்டம், கற்குடா. | 065-2050224 |

| தென்னைப் பயிர்ச்செய்கைக்கு உரிய சுற்றுலா இல்லங்கள் 07 | | | |
|---|---|---|---|
| **தொடர் இலக்கம்** | **சுற்றுலா இல்லம்** | **முகவரி** | **தொலைபேசி இலக்கம்** |
| 01 | கதிர்காமம் | "கொக்கோவிலா சுற்றுலா இல்லம்", சுற்றுலா இல்ல இடம், டிபோ வீதி, கதிர்காமம். | 0472236344 |
| 02 | பாசிக்குடா | பாசிக்குடா மாதிரி தென்னந் தோட்டம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, பாசிக்குடா, கற்குடா. | 0652050224 |
| 03 | பளை | பளைமாதிரி தென்னந் தோட்டம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, A9 வீதி, பளை. | 0212050013 |

| | | | |
|---|---|---|---|
| 04 | பொலந்நறுவை | “புலத்திசி கொக்கோவிலா சுற்றுலா இல்லம்”,<br>தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,<br>கலஹகல வீதி,<br>புதிய நகரம்,<br>பொலந்நறுவை. | 0272052881 |
| 05 | நிலாவெளி | “கோகோ வில்லா சுற்றுலா இல்லம்”,<br>குபுருபிடி,<br>திருகோணமலை. | 0262054019 |
| 06 | கொஹொம்பான | கொஹொம்பான மாதிரி தென்னந் தோட்டம்,<br>தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,<br>கோனாகொல்ல,<br>அம்பாறை. | 0632222477 |
| 07 | ஹந்தபானாகல | “ஹந்தபானாகலசுற்றுலா இல்லம்”,<br>ஹந்தபானாகல தென்னைங் கன்று<br>நாற்றுமேடை,<br>ஹந்தபானாகல,<br>வெஹெரயாய. | 0552274665 |
| **08** | கட்டுகெலியாவ | “கொக்கோவிலாசுற்றுலா இல்லம்”,<br>மஹிலா மாவத்தை,<br>கட்டுகெலியாவ,<br>கல்கடவல. | 0252222543 |
| **09** | பொலந்நறுவை | “போபிட்டிய சுற்றுலா பதவி இல்லம் ”,<br>போபிட்டிய மாதிரி தென்னந் தோட்டம்,<br>கு/போபிட்டிய(வடமேல்) | 0372288601 |

| **“கப்துருபாய” விற்பனை மற்றும் சேவை மத்தியநிலையம் 05** | | |
|---|---|---|
| **தொடர் இல** | **முகவரி** | **தொலைபேசி இலக்கம்** |
| **01** | மஹாயாயமாதிரி தென்னந் தோட்டம்<br><br>மாகந்துர, கோனவில. | 031-2299781 |
| **02** | போப்பிட்டியமாதிரி தென்னந் தோட்டம்<br><br>போப்பிட்டிய.(வடமேல்) | 037-2288601 |
| **03** | தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,<br>“கப்ருக பியச”,டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, பத்தரமுல்லை. | 011-2861331 |
| **04** | டேசிவெலி மாதிரி தென்னந் தோட்டம்,<br>இலுக்வேல, வேஉட. | 037-2299880 |
| **05** | அம்பாறை பிரதேச அலுவலகம்,<br><br>தர்மபால மாவத்தை, கச்சேரிக்கு முன்னால், அம்பாறை | 063-2222477 |

# உள்ளடக்கம்

01 விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு பிரிவு 052

02 மாதிரி தென்னந் தோட்டம் மற்றும் நாற்று மேடை அபிவிருத்தி பிரிவு 072

03 நிருவாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவ பிரிவு 092

04 உள்ளக கணக்காய்வுப் பிரிவு 098

05 நிதி முகாமைத்துவ பிரிவு 101

06 கணக்காய்வதிபதியின் அறிக்கை 107

# 1.0 விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

## 1.1 தென்னைப் பயிர்ச் செய்கை சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

### 1.1.1 <u>முறையான தென்னைச் செய்கையின் கீழ் நாற்று நடுதல்</u>

புதிய பயிர்ச் செய்கைகள், மீள் பயிர்ச் செய்கைகள் அல்லது ஊடுபயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு சலுகை விலையில் தென்னங்கன்றுகளை வழங்குவது இந்த மானியத்தின் கீழ் இடம்பெறுகிறது. இங்கு, குறைந்தபட்சம் ¼ ஏக்கர் முதல் அதிகபட்சம் 15 ஏக்கர் வரையான தென்னை பயிர்ச் செய்கைகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்படுகின்றன. மேலும், இந்தக் கன்றுகள் எடுத்துச் செல்லப்பட்டு பயிர்ச் செய்கையாளருக்கு வழங்கப்படுவதுடன், கன்றுகளை வழங்குவதற்கு முன்னர், தென்னைப் பயிர்ச் செய்கை சபை மூலம் கன்றுகளை நடுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 388,000 தென்னங்கன்றுகளை நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன், வருட இறுதிக்குள் 405,719 கன்றுகளை நடுவதற்கு தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்கு முடிந்தது.

### 1.1.2 <u>வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம்</u>

இலங்கையர்களின் தினசரி தென்னை நுகர்வுத் தேவைகளை அவர்களின் வீட்டுத்தோட்டத்திலேயே உற்பத்தி செய்வதற்கு வீட்டுத்தோட்ட உரிமையாளர்களை ஊக்குவிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த மானிய நிகழ்ச்சித்திட்டம் பல முறைகளின் மூலம் வீட்டுத்தோட்ட உரிமையாளர்களுக்கு தென்னங்கன்றுகளை வழங்குகிறது. இதன் கீழ், 494,353 தென்னங்கன்றுகள் மானியமாக பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த நாற்றுகள் பின்வரும் முறைகளின் கீழ் நடப்பட்டன:

1. வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம்
2. விசேட வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம்
3. நகரப்புற வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம்
4. தெற்கு சிறிய தென்னை முக்கோணம் - ஹம்பாந்தோட்டை

5. சர்வதேச தென்னை தினத்திற்கு ஒருங்கமைவாக தென்னங்கன்றுகள் விநியோக நிகழ்ச்சித்திட்டம்

**1.1.3 <u>வெற்று இடங்களில் கன்றுகளை நடுவதன் மூலம் ஒரு தென்னந்தோப்பில் இருக்க வேண்டிய உகந்த தென்னை மரங்களின் எண்ணிக்கையைப் பராமரித்தல்</u>**

ஒரு ஏக்கரில் பராமரிக்கப்பட வேண்டிய உகந்த தென்னை மரங்களின் எண்ணிக்கை இல்லாதது, இலங்கையின் தென்னைப் பயிர்ச்செய்கை நிலங்களில் தென்னை விளைச்சல் குறைவதற்கு ஒரு முக்கிய காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில், தென்னந்தோப்பு புனரமைப்பின் கீழ் வெற்று இடங்களில் நடுவதற்கு இலக்கு வைக்கப்பட்ட நாற்றுகளின் எண்ணிக்கை 100,000 ஆகும். 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 108,937 தென்னங்கன்றுகள் நடப்பட்டன.

இதன்படி, 2024 ஆம் ஆண்டில் மானியமாக 1,163,442 தென்னங்கன்றுகள் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட புதிய/மீள்/ஊடுபயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டம், வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம், வெற்று இடங்களில் கன்றுகளை நடும் நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து கன்றுகளும், ரூ. 250.00 பெறுமதியான ஒரு நிலக்கன்று ரூ. 150.00 ஆகவும், ரூ. 325.00 பெறுமதியான ஒரு பானைக் கன்று ரூ. 225.00 ஆகவும் சலுகை விலையில் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய, ஒரு நிலத்தென்னங்கன்று மற்றும் ஒரு பானைத் தென்னங்கன்றுக்கான மானிய விலை ரூ. 100.00 ஆகும். இதன்படி, 2024 ஆம் ஆண்டில் 476,345 தென்னங்கன்றுகள் பணத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை இல. 1.1 2024 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகங்கள் ரீதியான முன்னேற்றம்**

| பிராந்திய அலுவலகம் | முறையான தென்னைச் செய்கையின் கீழ் கன்று நடும் பௌதீக முன்னேற்றம் (கன்றுகள்) | வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய அனைத்து நிகழ்ச்சித்திட்டங்கள் - முன்னேற்றம் (கன்றுகள்) | வெற்று இடங்களில் கன்றுகளை நடும் முன்னேற்றம் (கன்றுகள்) |
|---|---|---|---|
| மொனராகலை | 20,218 | 34,757 | 996 |
| மாத்தறை | 3,994 | 2,536 | 517 |
| குருநாகல் | 85,344 | 62,653 | 17,374 |
| குளியாப்பிட்டிய | 52,192 | 13,580 | 29,636 |
| கேகாலை | 12,830 | 12,251 | 3,367 |
| கம்பஹா | 39,538 | 9,934 | 10,513 |
| களுத்துறை | 12,506 | 12,099 | 3,495 |
| மாரவில | 58,184 | 25,811 | 22,590 |
| இரத்தினபுரி | 22,700 | 12,924 | 4,291 |
| ஹம்பாந்தோட்டை | - | 132,840 | - |
| அனுராதபுரம் | 25,277 | 37,897 | 4,282 |
| திருகோணமலை | 10,790 | 3,349 | 897 |
| பொலன்னறுவை | 6,828 | 14,939 | 1,611 |
| அம்பாறை | 11,531 | 14,665 | 3,667 |
| மாத்தளை | 12,138 | 10,048 | 2,318 |
| காலி | 14,250 | 15,843 | 1,732 |
| மட்டக்களப்பு | 10,939 | 3,982 | 923 |
| யாழ்ப்பாணம் | - | 322 | - |
| வவுனியா | 1,058 | 5,180 | - |
| கண்டி | 5,402 | 68,743 | 728 |
| மொத்தம் | **405,719** | **494,353** | **108,937** |

### 1.1.4 வடக்குப் தென்னை முக்கோண கருத்திட்டம்

2022 ஆம் ஆண்டில் விசேட கருத்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட வடக்கு தென்னை முக்கோண கருத்திட்டம், வட மாகாணத்தில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிராந்திய அலுவலகங்களை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. சிலாபத்துறை, கொக்கிலாய், பருத்தித்துறை ஆகிய இடங்களை எல்லையாகக் கொண்டு

நடைமுறைப்படுத்தப்படும் இந்த வடக்கு தென்னை முக்கோணத் திட்டத்தின் கீழ், 2023 ஆம் ஆண்டில் 466,926 தென்னங்கன்றுகள் நடப்பட்டன.

2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் வடக்கு தென்னை முக்கோணத் திட்டத்தின் கீழ் 154,433 தென்னங்கன்றுகள் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இங்கு, பின்வரும் 02 முறைகளின் கீழ் தென்னங்கன்றுகள் நடப்பட்டன.

**அட்டவணை இல. 1.2 -2024 ஆம் ஆண்டில் வடக்கு தென்னை முக்கோணத் திட்டத்தின் கீழ் தென்னங்கன்றுகள் நடுவதன் முன்னேற்றம்**

| பிராந்திய அலுவலகம் | பிரதேசத்திற்குத் தனித்துவமான தென்னங்கன்று நடுகைத் திட்டம் | புதிய/மீள்/ஊடுபயிர்ச் செய்கையின் கீழ் கன்று நடும் நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 39,794 | 74,092 |
| வவுனியா | 26,966 | 13,581 |
| மொத்தம் | **66,760** | **87,673** |

### 1.1.5 விசேட செவ்விளநீர் பயிர்ச்செய்கைத் திட்டம்

செவ்விளநீர் பயிர்ச்செய்கைக்கான தற்போதைய தேவையை கருத்தில் கொண்டு, தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் ரூ. 25 மில்லியன் நிதிப் பங்களிப்பின் கீழ் செவ்விளநீர் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்காக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் கீழ் 26,444 செவ்விளநீர்க் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன, 66 செவ்விளநீர்க் கிராமங்கள் நிறுவப்பட்டுள்ளன, செவ்விளநீர் துறையில் பங்குதாரர்களுடன் 37 விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன, அத்துடன் செவ்விளநீர் பயிர்ச்செய்கைத் துறைக்குச் சொந்தமான பங்குதாரர்களின் 3,774 நிலங்கள் தொடர்பான தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, செவ்விளநீர் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 26,444 செவ்விளநீர்க் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இல. 1.3 விசேட செவ்விளநீர் பயிர்ச்செய்கைத் திட்டத்தின் கீழ் செவ்விளநீர்க் கன்றுகள் விநியோகிப்பதன் முன்னேற்றம்**

| பிராந்திய அலுவலகம் | செவ்விளநீர்க் கன்றுகள் விநியோகம் |
|---|---|
| மொனராகலை | 1,075 |
| மாத்தறை | 625 |
| குருநாகல் | 3,724 |
| குளியாப்பிட்டிய | 2,685 |
| கேகாலை | 1,099 |
| கம்பஹா | 4,266 |
| களுத்துறை | 1,079 |
| மாரவில | 3,512 |
| இரத்தினபுரி | 1,709 |
| அனுராதபுரம் | 903 |
| பொலன்னறுவை | 409 |
| அம்பாறை | 1,065 |
| காலி | 1,872 |
| மட்டக்களப்பு | 385 |
| கண்டி | 2,036 |
| மொத்தம் | **26,444** |

### 1.1.6 எல்நினோ நிலைமையிலிருந்து தென்னைப் பயிர்ச்செய்கையைப் பாதுகாப்பதற்கான மானியம்

தென்னந்தோட்டங்களின் உற்பத்தித்திறன் குறைவதற்கான முக்கிய காரணிகளில் ஒன்று மண்ணின் ஈரப்பதம் குறைவாக இருப்பது ஆகும். நீர்ப்பற்றாக்குறை காரணமாக, வருடத்தின் சில காலங்களில் தென்னை விளைச்சல் குறிப்பிடத்தக்க அளவு குறைவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலையைத் தவிர்க்க, தென்னை பயிர்ச்செய்கை பகுதியில் உள்ள மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாப்பது ஒரு பொருத்தமான நடவடிக்கையாகும். தென்னை மரங்களுக்கு மூடாக்கு இடுவதன் மூலம் தென்னந்தோட்டத்தில் ஈரப்பதத்தைப் பேணிக்காப்பதனால், விளைச்சலை சீராகப் பராமரிக்கலாம். இவற்றுக்கு மேலதிகமாக, 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அமைச்சு வழங்கிய அறிவித்தலின் படி, 2024 இல் ஏற்படக்கூடிய எல்நினோ நிலைமையிலிருந்து தென்னைப் பயிர்ச்செய்கையைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு, ஒரு தென்னை மரத்திற்கு மூடாக்கு இடுவதற்காக ரூ. 100 மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 1.4 எல்நினோ நிலைமையிலிருந்து தென்னை பயிர்ச்செய்கையைப் பாதுகாக்கும் நோக்குடன் மானியம் வழங்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை

| பிராந்திய அலுவலகம் | மானியம் வழங்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மொனராகலை | 15,665 |
| மாத்தறை | 3,343 |
| குருநாகல் | 64,500 |
| குளியாப்பிட்டிய | 37,255 |
| கேகாலை | 10,600 |
| கம்பஹா | 21,290 |
| களுத்துறை | 6,993 |
| மாரவில | 51,550 |
| இரத்தினபுரி | 11,275 |
| ஹம்பாந்தோட்டை | 32,366 |
| அனுராதபுரம் | 20,026 |
| திருகோணமலை | 10,300 |
| பொலன்னறுவை | 11,183 |
| அம்பாறை | 15,300 |
| மாத்தளை | 8,491 |
| காலி | 9,350 |
| மட்டக்களப்பு | 7,090 |
| யாழ்ப்பாணம் | 18,687 |
| வவுனியா | 7,565 |
| கண்டி | 4,700 |
| மொத்தம் | **367,529** |

### 1.1.7. <u>கடந்த வருடங்களில் நடப்பட்ட தென்னங்கன்றுகளை கண்காணித்தல்</u>

புதிய/மீள்/ஊடுபயிர்ச் செய்கையின் கீழ் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நடப்பட்ட கன்றுகளை கண்காணிக்கும் திட்டம் 2024 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன்போது, “Arc GIS” மற்றும் “Survey 123” மென்பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு கையடக்கத் தொலைபேசி செயலி மூலம், கடந்த வருடங்களில் நடப்பட்ட தென்னங்கன்றுகளிலிருந்து தோராயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. இதன்போது, 2024 ஆம் ஆண்டில் 3,667 நிலங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அத்துடன், எஞ்சிய நிலங்களை 2025 ஆம் ஆண்டில் ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.1.8 <u>மதிப்பீடு செய்யப்பட்ட தென்னை பயிர்ச்செய்கை பரப்பு</u>

2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின்படி, மதிப்பீடு செய்யப்பட்ட தென்னை பயிர்ச்செய்கை பரப்பு 480,215 ஹெக்டேயர் ஆகும்.

**அட்டவணை இல. 1.5 மாவட்ட ரீதியாக மதிப்பீடு செய்யப்பட்ட தென்னை பயிர்ச்செய்கை பரப்பு கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.**

| மாவட்டம் | ஏக்கர்களின் எண்ணிக்கை | ஹெக்டேயர் * |
|---|---|---|
| கொழும்பு | 21,875 | 8,856 |
| கம்பஹா | 132,646 | 53,703 |
| களுத்துறை | 23,052 | 9,333 |
| கண்டி | 12,908 | 5,226 |
| மாத்தளை | 36,186 | 14,650 |
| நுவரெலியா | 2,296 | 930 |
| காலி | 20,587 | 8,335 |
| மாத்தறை | 18,558 | 7,513 |
| ஹம்பாந்தோட்டை | 50,412 | 20,410 |
| யாழ்ப்பாணம் | 11,942 | 4,835 |
| கிளிநொச்சி | 7,981 | 3,231 |
| மன்னார் | 3,700 | 1,498 |
| வவுனியா | 7,279 | 2,947 |
| முல்லைத்தீவு | 8,732 | 3,535 |
| மட்டக்களப்பு | 13,007 | 5,266 |
| அம்பாறை | 12,677 | 5,132 |
| திருகோணமலை | 10,634 | 4,305 |
| குருநாகல் | 429,418 | 173,854 |
| புத்தளம் | 194,771 | 78,855 |
| அனுராதபுரம் | 33,482 | 13,555 |
| பொலன்னறுவை | 10,696 | 4,331 |
| பதுளை | 8,824 | 3,573 |
| மொனராகலை | 31,923 | 12,924 |
| இரத்தினபுரி | 47,052 | 19,049 |
| கேகாலை | 35,493 | 14,370 |
| இலங்கை | **1,186,131** | **480,216** |

* மதிப்பீடு செய்யப்பட்ட

### 1.1.9 வெலிகம இலை வாடல் மற்றும் அழுகல் நோய் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையின் தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில் முதலில் பதிவான இலை வாடல் மற்றும் அழுகல் நோய் நிலைமையானது, பிற்காலத்தில் காலி மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பதிவாகியுள்ளது. வைரஸ் போன்ற ஃபைட்டோபிளாஸ்மா நோய்க்கிருமியால் இந்த

நோய் ஏற்படுகிறது. இதுவரை உலகத்தின் எந்த நாட்டிலும் ஃபைட்டோபிளாஸ்மாவுக்கான சரியான சிகிச்சை கண்டுபிடிக்கப்படவில்லை.
இந்த நோய் அடையாளம் காணப்பட்ட பின்னர், தென்னை ஆராய்ச்சி நிறுவனம், தாவரப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டப்பூர்வ அதிகாரியான விவசாயப் பணிப்பாளர் நாயகத்துடன் இணைந்து, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் காலி மாவட்டங்களில் உள்ள 157 கிராம அலுவலர் பிரிவுகளை நோய் வலயங்களாகப் பெயரிட்டுள்ளது.

அத்துடன், நோய் வெளியே பரவுவதைத் தடுப்பதற்காக, காலி, தெனியாயவிலிருந்து ஹக்மன ஊடாக தங்கல்ல வரையான 86 கி.மீ நீளமும் 3 கி.மீ அகலமும் கொண்ட ஒரு நோய் தடுப்பு வலயம் பெயரிடப்பட்டது. இந்த வலயத்தில் உள்ள அனைத்து நோயுற்ற மரங்களும் பிடுங்கி அகற்றப்படுவதுடன், இந்த வலயத்தின் எல்லைகளுக்கு வெளியே எந்தவொரு தென்னை மரத்தின் உயிருள்ள பொருளையும் கொண்டு செல்வது தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது. இதேபோல், விவசாயத் திணைக்களத்தினால், இந்த இனத்தைச் சேர்ந்த ஏனைய பயிர்களை கொண்டு செல்வதற்கும் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயைக் கட்டுப்படுத்த வேறு மாற்று நடவடிக்கைகள் இல்லாததால், தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவுறுத்தலின் பேரில் 2008 ஆம் ஆண்டு முதல் நோய்வாய்ப்பட்ட தென்னை மரங்களை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2024.12.31 ஆம் திகதியன்று, தென்னைப் பயிர்ச் செய்கை சபை 157 கிராம அலுவலர் பிரிவுகளை ஆய்வு செய்துள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் அடையாளமிடப்பட்ட நோயுற்ற மரங்களின் எண்ணிக்கை 6,986 ஆகும். 2023.12.31 ஆம் திகதியன்று களத்திலிருந்து அகற்ற முடியாத நிலையில் எஞ்சியிருந்த 5,476 நோயுற்ற மரங்களுடன், மொத்தமாக 12,462 நோயுற்ற மரங்கள் களத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில், 5,279 நோயுற்ற மரங்களுக்கு ஊசி போடப்பட்டுள்ளதுடன், 3,656 மரங்கள் விவசாயிகளால் அகற்றப்பட்டுள்ளன. அதன்படி, 2024.12.31 ஆம் திகதியன்று 2024 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட மொத்த மரங்களின் எண்ணிக்கை 8,935 ஆக உள்ளதுடன், 5,276 மரங்களுக்கான நட்டஈடாக 15.828 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 1.6. - 2024.12.31 ஆம் திகதியன்று வெலிகம இலை வாடல் மற்றும் அழுகல் நோய் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்.**

| மாவட்டம் | பரிசோதனை செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை | அடையாளமிப்பட்ட மரங்களின் எண்ணிக்கை | அகற்றப்பட்ட மரங்களின் எண்ணிக்கை | ஊசி ஏற்றப்பட்ட மரங்களின் எண்ணிக்கை | செலுத்தல்களை வழங்கிய மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| **மாத்தறை** | 68 | 4,871 | 6,288 | 4,362 | 4,078 |
| **காலி** | 47 | 1,563 | 2,249 | 892 | 891 |
| **ஹம்பாந்தோட்டை** | 42 | 552 | 398 | 25 | 307 |
| **மொத்தம்** | **157** | **6,986** | **8,935** | **5,279** | **5,276** |

அதேபோல், நோய்வாய்ப்பட்ட மரங்கள் அகற்றப்பட்ட காணிகளில், நோய் தாக்காத விளைச்சல் தரும் மரங்களின் வீரியத்தை அதிகரிப்பதன் மூலம், நோய் நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் திறனை அதிகரித்தல், இரசாயன உரப் பயன்பாட்டை பிரபலப்படுத்துதல் மற்றும் அதன் மூலம் தென்னை மரங்களின் அறுவடையை அதிகரிப்பதற்காக காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை பிராந்திய அதிகாரப் பிரதேசத்தில் உள்ள 47,030 தென்னை மரங்களுக்கு இரசாயன உரமிடுவதற்காக 23.531 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

வெலிகம இலை வாடல் மற்றும் அழுகல் நோய்க்கு ஈடுகொடுக்கும் பச்சை குந்திரா X உயரமான கலப்பின (CRIC 65-G) 12,500 தொட்டி தென்னங்கன்றுகள், இந்த நோய் வலயத்தின் நோய் சிறிதளவு பரவியுள்ள மற்றும் அரிதாக நோய்வாய்ப்பட்ட மரங்கள் காணப்படும் பகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும், களத்தில் நடப்பட்ட தென்னங்கன்றுகளை விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக, தென்னங்கன்றைச் சுற்றி ஒரு பீப்பாயை அமைப்பதற்காக அல்லது தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் விதப்புரை செய்யப்பட்ட பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுவதற்காக, ஒரு கன்றிற்கு 600.00 ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 16.820 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செலவிடப்பட்டுள்ளது.

### 1.1.10 வெள்ளை ஈ தாக்குதல் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

2019 ஆம் ஆண்டில், கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சார்ந்ததாக இந்தப் பாதிப்பு முக்கியமாகப் பதிவானதுடன், தென்னைப் பயிர்ச் செய்கையைச் சார்ந்தாக வெள்ளை ஈ பீடைத் தாக்குதல் மிக வேகமாகப் பரவியது. அதன்படி, தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள விதப்புரைகளுக்கு அமைய, தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் கள உத்தியோகத்தர்களின் வழிகாட்டலின் கீழ், பாதிப்பு மற்றும் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி, 2024.12.31 ஆம் திகதியன்று, 139 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை 1,060 ஆகும். அதேபோல், வெள்ளை ஈக்களால் பாதிக்கப்பட்ட 119,905 தென்னை மரங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

### 1.1.11 பிரொன்டிஸ்பா பூச்சித் தாக்குதல் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் பசுபிக் தீவுகளில் அதிக அளவில் பதிவான பிரொன்டிஸ்பா பூச்சித் தாக்குதல், இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கையில் முதல் முறையாகப் பதிவானதுடன், தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் விதப்புரைகளின்படி, 2023.03.09 ஆம் திகதி முதல் தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் தடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்படி, காலி, தொடந்தூவவிலிருந்து மாத்தறை, கம்புருகமுவ கடற்கரை பகுதி வரையிலும், இந்தக் கடற்கரையிலிருந்து 1 கி.மீ உட்புறமாக காலி மாவட்டத்தின் தொடந்தூவ, பூஸ்ஸ, லபுதுவ, அஹங்கம மற்றும் பேலஸ்ஸ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், மாத்தறை மாவட்டத்தில் அமைதுள்ள சேர்ந்த மிதிகம மற்றும் கப்பரதொட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 50 கி.மீ தூரத்திற்குப் பரவியிருந்தது. ஆண்டின் இறுதியில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் பிரொன்டிஸ்பா பாதிப்பு பதிவானது.

இந்தப் பூச்சித் தாக்குதல் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக அமைச்சின் நிதி ஒதுக்கீடாக 3.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 2024.12.31 ஆம் திகதியன்று, மாத்தறை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 4,938 நோயுற்ற மரங்கள் அடையாளம் காணப்பட்டதுடன், 4,260 நோயுற்ற மரங்களுக்கு ஊசி போடப்பட்டது.

**அட்டவணை இல. 1.7 2024.12.31 ஆம் திகதியன்று பிரொன்டிஸ்பா பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான முன்னேற்றம்.**

| தொடர் இலக்கம் | பிராந்திய அலுவலகம் | மொத்த அடையாளமிடப்பட்டவை | மொத்த ஊசி ஏற்றப்பட்டவை |
|---|---|---|---|
| 1 | காலி | 910 | 568 |
| 2 | மாத்தறை | 2,478 | 2,142 |
| 3 | ஹம்பாந்தோட்டை | 1,550 | 1,550 |
| **மொத்தம்** | | **4,938** | **4,260** |

## 1.2 <u>விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டம்</u>

விவசாய சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனமாக, தென்னைப் பயிர்ச் செய்கை சபை தனது வாடிக்கையாளரான தென்னை பயிரிடுவோருக்கு தென்னைப் பயிர்ச் செய்கை தொடர்பான விஸ்தரிப்பு தகவல்களை வழங்குவது கட்டாயமாகும். இது சபையின் ஒரு முக்கிய பணியாகும். இது பின்வரும் முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

முழு கூட்டுத் திட்டத்திற்கும் அமைய, வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மற்றும் தொடர்புடைய அபிவிருத்தித் திட்டங்கள், அத்துடன் அவற்றுக்கான ஒதுக்கீடுகளை ஒதுக்கும் திட்டம் என்பன உதவிப் பொது முகாமையாளரினால் (விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தி) மேற்கொள்ளப்படுவதோடு அது விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளரின் மேற்பார்வை மற்றும் உடன்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கமைய, இந்த அனைத்து தகவல்களும் எழுத்துப்பூர்வமாகவும் சுற்றறிக்கைகள் மூலமாகவும் பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்பப்படுவதுடன், பிராந்திய முகாமையாளர்களால் தமது அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி மற்றும் விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இங்கு, பிரதேச முகாமையாளருக்கு மேலதிகமாக, உதவிப் பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் பண்ணைத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் மேற்பார்வை உத்தியோகத்தர்களாகச் செயற்படுகின்றனர்.

அவர்களின் முழுமையான மேற்பார்வையின் கீழ், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கள உத்தியோகத்தர்களின் வருடாந்த மற்றும் மாதாந்த விஸ்தரிப்பு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்படுவதுடன், இதற்கான முழுமையான ஒத்துழைப்பு, வளப் பங்களிப்பு மற்றும் வழிகாட்டல் என்பன தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் வழங்கப்படுகின்றன.

இது தவிர, தலைமை அலுவலகத்தின் விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு மற்றும் தகவல் பிரிவு என்பன தேசிய மட்டத்தில் விரிவாக்க சேவையை வழங்குகின்றன.

2024 ஆம் ஆண்டில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது, முக்கியமாக பின்வரும் குறிக்கோள்கள் இலக்கு வைக்கப்பட்டன.

1. விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக தென்னைப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
2. பூச்சிகள் மற்றும் பீடைகளால் தென்னைப் பயிர்ச் செய்கைக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைத்தல்.
3. தென்னைக் காணிகளை அபிவிருத்தி செய்தல்.
4. பன்முக அணுகுமுறையின் மூலம் விவசாயிகளுக்கு விரிவான விஸ்தரிப்பு சேவையை வழங்குதல்.
5. சுவர்ணபத்திர காணிகளைப் பரிசோதித்தல்.

2024 ஆம் ஆண்டில் தென்னைப் பயிர்ச் செய்கை சபை நாடு முழுவதும் 1,225 குழு விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. மேலும், 74,879 தனிப்பட்ட சந்திப்புகளும் நடத்தப்பட்டன. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் விவசாயிகளுடனான மொத்த சந்திப்புகளின் எண்ணிக்கை 140,650 ஆகும்.

**அட்டவணை இல. 1.8 - 2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட குழு விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்.**

| பிராந்திய அலுவலகம் | தனிப்பட்ட சந்திப்புகளின் முன்னேற்றம் | குழு விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் | பன்முக அணுகுமுறையின் மூலம் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் தென்னைப் பயிர்ச் செய்கை பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயலமர்வுகள் | சுவர்ணபத்திர காணிப் பரிசோதனை |
|---|---|---|---|---|
| மொனராகலை | 4,590 | 134 | 12 | 81 |
| மாத்தறை | 6,735 | 56 | 10 | 52 |
| குருநாகல் | 12,829 | 127 | 31 | 195 |
| குளியாப்பிட்டிய | 9,184 | 74 | 17 | 247 |
| கேகாலை | 2,847 | 54 | 9 | 51 |
| கம்பஹா | 4,550 | 120 | 19 | 126 |
| களுத்துறை | 2,034 | 23 | 14 | 46 |
| மாரவில | 5,355 | 74 | 20 | 187 |
| இரத்தினபுரி | 1,301 | 74 | 9 | 25 |
| ஹம்பாந்தோட்டை | 2,595 | 47 | 12 | 61 |
| அனுராதபுரம் | 4,207 | 162 | 11 | 52 |
| திருகோணமலை | 828 | 33 | 12 | 45 |
| பொலன்னறுவை | 2,425 | 34 | 7 | 25 |
| அம்பாறை | 4,689 | 23 | 9 | 46 |
| மாத்தளை | 1,112 | 22 | 6 | 54 |
| காலி | 935 | 41 | 10 | 60 |
| மட்டக்களப்பு | 3,493 | 23 | 10 | 51 |
| யாழ்ப்பாணம் | 1,630 | 15 | 21 | 42 |
| வவுனியா | 2,881 | 13 | 10 | 28 |
| கண்டி | 659 | 76 | 7 | 62 |
| மொத்தம் | **74,879** | **1,225** | **256** | **1,536** |

## 1.3 தேசியப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

தென்னை பயிர்ச் செய்கை சபையின் ஒட்டுமொத்த தேசிய விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தென்னை அபிவிருத்திப் பயிற்சி நிலையம் ஊடாக விஸ்தரிப்பு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் தென்னை பயிர்ச் செய்கை அதிகாரிகள், தென்னை விவசாயிகள் மற்றும் விவசாயம் கற்கும் மாணவர்கள் ஆகியோர் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

2024 ஆம் ஆண்டில், தென்னை அபிவிருத்திப் பயிற்சி நிலையம் மூலம் 3 பிரதான பிரிவுகளின் கீழ் பின்வருமாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அத்துடன், அச்சுவேலி மற்றும் மெதமுலன பயிற்சி நிலையங்கள் ஊடாகவும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான கள மாதிரியாக ஒரு மாட்டுத் தொழுவமும் தாபிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை எண் 1.9 2024 ஆம் ஆண்டில் தென்னை அபிவிருத்திப் பயிற்சி நிலையம் மூலம் நடத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் பயிற்சித் திட்ட நிகழ்ச்சிகளின் முன்னேற்ற பகுப்பாய்வு**

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட | | முன்னேற்றம் | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | தொகை ரூபா | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | தொகை ரூபா | |
| 1. விஸ்தரிப்பு அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 14 | 2,580,000.00 | 14 | 2,341,335.40 | 727 |
| 2. தொழில்நுட்பம் சாராத பணியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 6 | 1,210,000.00 | 8 | 1,153,373.51 | 257 |
| 3. தென்னை விவசாயிகள் மற்றும் வெளித் தரப்பினருக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 54 | 2,660,000.00 | 61 | 2,645,323.85 | 3,313 |
| 4. தென்னை பயிர்ச்செய்கைப் | 13 | 320,000.00 | 13 | 292,500.00 | 587 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் - அச்சுவேலி | | | | | |
| 5. தென்னை பயிர்ச்செய்கைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் - மெதமுலன | 13 | 220,000.00 | 16 | 214,260.00 | 601 |
| 6. கள மாதிரிகள் - ஒரு மாட்டுத் தொழுவம் உருவாக்கம் | 1 | 1,200,000.00 | 1 | 958,106.42 | |

### 1.3.1 <u>நோய் மற்றும் பூச்சிப்பீடை முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்</u>

